# 2011ஆம் ஆண்டின் பொருளாதார கணக்கெடுப்பிற்கான சுருக்கமான தகவல் மலேசிய புள்ளி விவரத்துறை

Jabatan Perangkaan MALAYSIA

மூன்றாவது முறையாக பொருளாதார கணக்கெடுப்பு மேற் கொள்ளப்பட்டு வருகிறது. வழக்கமாக ஐந்து ஆண்டுக்கு ஒருமுறை. இந்த பொருளாதார கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. ஐ.நாவின் புள்ளி விவர பிரிவின் அங்கீகாரத்திற்கு ஏற்ப பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகள் பொருளாதார கணக்கெடுப்பை அமல்படுத்தி வருகின்றன. மலேசியாவில் அனைத்து வர்த்தக நிறுவனங்களையும் உள்ளடக்கி முழுமையாக இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது. மலேசியாவிலுள்ள ஒவ்வொரு பொருளாதார நடவடிக்கையின் விவரங்கள் மற்றும் அமைப்பு தொடர்பான முழுமையான தகவல்களை பெறுவதற்காக பொருளாதார கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகிறது.

மேம்பாட்டுத் திட்டத்தை வரைவதற்கும் தேசிய பொரு ளாதாரக் கொள்கையை வரைவதற்கும் இந்த தகவல்கள் பயன்படுத்தப் படும். கே.டி.என்.கே. எனப்படும் தேசிய மொத்த உற்பத்தியை நிலைப்படுத்துவதிலும் தொழில் உற்பத்தி குறியீடு, உற்பத்தியாளர் விலை குறியீடு போன்றவற்றின் மறுசீரமைப்புக்கும் ஓர் அடையாளமாகவும் இது பயன்படுத்தப்படும். இந்த கணகெடுப்பின் மூலம் ஆய்வின் நோக்கத்திற்காகவும் எதிர் காலத்திற்கான ஆய்வுக்காகவும் நிறுவன பட்டியலை இப்போது சீரமைக்க முடியும். சிறு தொழில் மற்றும் நடுத்தர தொழில் (PKS) தொடர்பான முழுமையான தகவல்களையும் இம்முறை பொருளாதார கணக்கெடுப்பு திரட்டுகிறது. 2011 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டில் மலேசிய பொருளாதாரம் 4.4 விழுக் காட்டுடன் மொத்த உள்நாட்டு மதிப்பு ரிம. 412.8 பில்லியனாகும்.

நாட்டின் பொருளாதாரத்தின் அனைத்து துறைகளிலும் உள்ள வர்த்தக நிறுவனங்களை இந்த கணக்கறிக்கை உள்ளடக்கி யுள்ளது. அதாவது விவசாயம், தயாரிப்புத்துறை, கட்டுமானம், சுரங்கம் மற்றும் கல் உடைப்பு நிறுவனம் மற்றும் சேவைத் துறையையும் இது கொண்டுள்ளது. போக்குவரத்து, கையிருப்பு கிடங்கு, தங்கும் வசதி, உணவு, பானங்கள் மற்றும் தொழில் நிபுணத்துவம் போன்ற சிறு துறைகளையும் சேவைத்துறை உள்ளடக்கியுள்ளது. இந்த கணக்கெடுப்பில் மொத்தம் 943,000 நிறுவனங்கள் உள்ளடங்கியுள்ளது என எதிர்பார்க்கப்படுகிறது.

2011ஆம் ஆண்டு மே மாதம் இந்த கணக்கெடுப்பு தொடங்கப்பட்டது. உணவு மற்றும் பானங்கள் துறையில் கணக்கெடுப்பு முழுமையடைந்துள்ளது.விவசாயம், உற்பத்தி, கட்டுமானம், சுரங்கம் மற்றும் கல் உடைப்பு நிறுவனங்கள் மற்றும் இதர துறைகளுக்கான கணக்கெடுப்பு பணி இவ்வாண்டு இறுதிவரை மேற்கொள்ளப் படும்.

இந்த கணக்கெடுப்பிற்கான ஆய்வுகளை முழுமைப்படுத்துவ தற்காக இதுவரை தகவல்களை வழங்காத அனைத்து வர்த்தக நிறுவனங்களின் ஒத்துழைப்பு மிகவும் முக்கியமாகும். கணக்கறிக்கை இன்னும் தயார்படுத்தாமல் இருந்தால் சிறந்த மதிப்பீட்டை வழங்குவதற்கு விண்ணப்பிக்கவும்.

1965ஆம் ஆண்டின் புள்ளி விவர சட்டத்தின் கீழ் (1989ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட) ஆய்வின் உள்ளடக்கம் ரகசியமானது எனக் கூறப்பட்டுள்ளது. இது மற்ற தரப்பினரிடம் தெரிவிக்கக் கூடாது. இந்த சட்டத்தின் தேவைக்கு ஏற்ப மொத்த எண்ணிக்கையின் எண் மட்டுமே பிரசுரிக்கப்படும்.

தனிப்பட்ட நபர் ஒருவரின் அங்கீகரிக்கப்பட்ட உரிமம், தனிப்பட்ட நபர்களின் நிறுவனம்,பொது நிறுவனம், கூட்டுறவு நிறுவனம், பொதுக் கழகம், பங்கு உடமை நிறுவனம், சொந்த உரிமைக்கான அமைப்பு முறை போன்ற வர்த்தக நிறுவனங்களின் தகவல்கள் வர்த்தக நிறுவனங்களிடமிருந்து திரட்டப்படுகின்றன. இதுதவிர செலவுகள், வருமானம், வரவு, தொழிலாளர்களின் எண்ணிக்கை, வழங்கப்படும் சம்பளம் மற்றும் ஊதியம், மூலதன செலவு குறித்த தகவல் பெண்கள் உரிமையளரா என்பதை கண்டறியும் உரிமையாளர் நிலை மற்றும் வர்த்தகத்தில் பயன்படுத் தப்படும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிதி வளம் போன்ற தகவல்களும் பெறப்படும். சுற்றுப்புறத்தை பேணுவதற்கு செலவு செய்யப்படும் தொகையும் இந்த தகவலில் சேர்த்துக் கொள்ளப்படும்.

பொருளாதாரத்தின் சிறுதுறைகளுக்கு ஏற்ப 21 வெளியீடுகள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையின் வெளியீடு ஒன்றையும் மலேசிய புள்ளிவிவரத்துறை வெளியிடும்.

இந்த வெளியீட்டு அறிக்கையை தவிர, கணக்கெடுப்பு விவரங்களின் மூலம் பெறப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய கணக்கறிக்கை மறுசீரமைப்பு, உள் மற்றும் வெளி விவரங்கள் அடங்கிய அட்டவணை தயாரிப்பு, விநியோக பயன் அட்டவணை, சமூக கணக்கெடுப்பு மெட்ரிக்ஸ், சுற்றுலாத்துறை மீதான செட்டலிட் கணக்கறிக்கை மற்றும் இதர விவரங்கள் சீர்படுத்தப்படும்.

பொருளாதார உருமாற்றுத் திட்டத்தின் கீழ் தேசிய முக்கிய பொருளாதார பகுதிகளை கண்காணிப்பது மற்றும் மதிப்பீடு செய்யும் நோக்கத்தில் கணக்கெடுப்பதின் மூலம் பெறப்படும் நன்மைகள் பயன்படுத்தப்படும்.

அதே வேளையில் தங்களது திறன் மற்றும் போட்டா போட்டி யிடும் ஆற்றலை மேம்படுத்தி கொள்வதற்கு இந்த தகவல்களை நிறுவனங்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும். 2012ஆம் ஆண்டு ஜூன் முதல் இந்த கணக்கெடுப்பின் விவரங்கள் வெளியிடப் படும். மேலும் புள்ளி விவரத்துறையின் www.statistics.gov.my என்ற அகப்பக்கத்திலும் காணலாம். மேலும் புள்ளி விவரத்துறை வெளியிடும் சிறப்பு அறிக்கையிலும் இந்த விவரங்கள் பெறமுடியும்.

இந்த கணக்கெடுப்பை மேற்கொள்ளும்போது புள்ளிவிவரத் துறை பல்வேறு சிரமங்களையும், சவால்களையும் எதிர்நோக்கியது என்பதை மறுக்க முடியாது.

**இவற்றில் முக்கிய சவாலாக:**

- கணக்கெடுப்பிற்கான தகவல்களை வழங்குவதில் வர்த்தக நிறுவனங்களிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பு.
- கிடைக்கப்பெற்ற தகவல்கள் சரியாகவும், முழுமையாகவும் இருப்பதை உறுதிப்படுத்துவது.

இந்த வர்த்தக நிறுவனங்கள் மலேசிய புள்ளிவிவரத்துறைக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் என புள்ளி விவரத்துறை எதிர்பார்க்கிறது. மேலும் விநியோகிக்கப்பட்ட தகவல்கள் 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் சரியாகவும், முழுமையாகவும் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. இதுவரை 70% நிறுவனங்களை புள்ளி விவரத்துறை சந்தித்துள்ளது. 30% நிறுவனங்களை இன்னும் சந்திக்கவில்லை.

ஒத்துழைப்பு வழங்கிய நிறுவனங்களுக்கு பாராட்டுக்களையும் நன்றியையும் புள்ளிவிவரத்துறை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறது.